**வலுவாதார அபிவிருத்திச் சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வலுவாதார அபிவிருத்திச் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த நான்கு மாத காலப்பகுதிக்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

### 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.5.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்காக கணக்காய்வு கட்டணத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | குறித்து வைத்துக்கொள்ளப்பட்டதுடன், எஞ்சிய கொடுப்பனவுகளை போன்றே எதிர்வரும் வருடங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கீடுகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது. | கணக்காய்வு கட்டணத்திற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது | மீளாய்வாண்டிற்கான வலுவாதார அபிவிருத்திச் சபையின் நிதிக்கூற்றுக்கள், 2021 | 2020 ஆம் ஆண்டில், போதுமான பணியாளர்கள் பணியமர்த்தப்படவில்லை | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கை | பெப்ரவரி 28 அன்று அல்லது அதற்கு முன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்நிதிக்கூற்றுக்கள் 01 ஆண்டுக்கும் மேலாக தாமதத்திற்குப் பிறகு 2022 நவம்பர் 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | ல என்பதுடன், அந்த ஆண்டினுள் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகங்கள் தொடர்ந்து திறக்கப்படவில்லை. மேலும் இந்த காலகட்டத்தில் பேரவை உறுப்பினர்கள் / தலைவர் நியமனம் செய்வதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட பதவியணியொன்று காணப்பட்டமை மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு வரைபுகள் தயாரிக்கப்பட்ட போதிலும், அவ்வப்போது வரிசை அமைச்சு / தலைவர் மாற்றமடைந்தமையும் இந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதமடைவதற்கு காரணமாக அமைந்திருந்தது. | வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 97,588 கூட்டுப் பெறுமதியான 13 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் அறிவுரை வழங்கப்பட்டதுடன், இதுவரையிலும் நி.பி. பிரகாரம் செயற்பட்டதன் பின்னர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | நிதிப் பிரமாணம் 446(2) | காசுப் புத்தகத்தின் அனைத்துப் பதிவுகளுக்காகவும் பொறுப்புக் கூற வேண்டிய கண்காணிப்பு அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் | பதிவு செய்யப்பட்டதுடன், அறிவுரை வழங்கப்பட்ட பின்னர் சரியான பதிவு வைத்தல் மற்றும் காசுப் புத்தகத்தின் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒருவரால் சிறு கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும், அனைத்து பதிவுகளுக்காகவும் சிறு கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. | சிறு கையொப்பமிடல் சரியாக மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 257 | 07 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் மூலம் ரூபா 571,640 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த உறுதிச்சீட்டுகள் குறித்த சான்றுபடுத்தல் உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்து வைத்துக்கொள்ளப்பட்டதுடன், அறிவுரை வழங்கப்பட்ட பின்னர் சரியான செலவினங்களை சான்றுபடுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் வங்கி நடைமுறைக் கணக்கின் 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,407,716 ஆன மீதியொன்று நிலவியது. ஆண்டின் இறுதியில் அந்த மீதி ரூபா 2,184,582 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டின் வங்கி நடைமுறைக் கணக்கின் ரூபா 2,000,000 ஆன பண மீதியொன்று விளைவற்றுக் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக, அலுவலகங்கள் அவ்வப்போது மூடப்பட்டு, குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களே அழைக்கப்பட்டுள்ளனர். இந்த எதிர்பாராத சூழ்நிலையால், முந்தைய திட்டங்களின்படி செயல்பட முடியாது. இவ்வாறானதொரு சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில், இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | நிதியங்களை உரிய முறையில் பயன்டுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறுகள் ரூபா 164,414 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த நான்கு மாத காலப்பகுதியின் மிகை ரூபா 5,880,468 ஆகும். அதன் பிரகாரம், கடந்த வருடத்தின் நான்கு மாதங்களுக்கு உரிய நிதிப் பெறுபேற்றினை மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேற்றுடன் ஒப்பிடும் போது ரூபா 5,716,054 ஆன வீழ்ச்சியொன்றாக அவதானிக்கப்பட்டது. அதற்கமைய கடந்த வருடத்தின் நான்கு மாதங்களுக்குரிய செலவினம் ரூபா 4,325,532 ஆன போதிலும், மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 13,663,075 ஆக காணப்பட்டமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 3,866,342 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்துவதற்கு வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை 2022 நவம்பர் 02 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படவில்லை. | குறித்து வைத்துக்கொள்ளப்பட்ட போதிலும், போதிய பணியாளர்கள் இல்லாமை பிரச்சினைக்குரியதாக காணப்பட்ட போதிலும், மாற்று வழிகளை பின்பற்றி அந்த பணியை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக அவ்வப்போது அலுவலகம் மூடப்பட்டிருந்தமை, அவ்வப்போது வரையறுக்கப்பட்ட பதவியணி சேவைக்கு அழைக்கப்பட்டிருந்தமையும் இதற்கு காரணமாக அமைந்துள்ளது. மேலும் தற்போதும் மிகவும் வரையறுக்கப்பட்ட பதவியணியொன்றின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி விடயத்திற்கு உரிய கடமைகளை மேற்கொள்ளும் நிலையொன்றில் நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் பௌதீக சொத்துக்கள் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சபை நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்திற்காக மாதாந்த வாடகையொன்று செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அப்போது முன்னாள் வரிசை அமைச்சு பயன்படுத்திய கட்டிடத்திலேயே அலுவலகம் பராமரிக்கப்பட்டு வந்ததால் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | சபையினால் மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீட்டுக்கமைய ரூபா 65 மில்லியனான செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், உள்ளபடியான செலவினம் ரூபா 13.6 | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக, அலுவலகங்கள் அவ்வப்போது மூடப்பட்டு, குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களே அழைக்கப்பட்டுள்ளனர். இந்த எதிர்பாராத சூழ்நிலையால், முந்தைய திட்டங்களின்படி செயல்பட முடியாது. | வருடாந்த வரவு செலவுத் திட்டம் முடிந்தவரை துல்லியமாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனாக காணப்பட்டது. | இவ்வாறானதொரு சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில், இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | |
| (ஈ) | சபை கடந்த வருடத்தில் 04 மாத காலப்பகுதியில் மாத்திரம் செயல்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கடந்த வருடத்தின் புள்ளி விபரங்கள் 04 மாதங்களுக்குரிய தொகைகள் என்பது தெளிபுவடுத்தப்பட்டிருக்க வில்லை. | குறித்து வைத்துக்கொள்ளப்பட்டதுடன், அது தொடர்பில் சரியான கணக்கு வைப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காலப்பகுதி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி சபைக்காக தலைப்பு 102 – நிதி அமைச்சின் கீழ் மூலதன செலவினம் ரூபா 3.15 மில்லியனான நிதியேற்பாடு 2020 ஆம் ஆண்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 1.55 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மீண்டெழும் செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 14.30 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 12.24 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் வலுவாதார அபிவிருத்தி சபைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீண்டெழும் மற்றும் மூலதன நிதியேற்பாட்டில் முறையே 2.06 மில்லியன் அல்லது 14 சதவீதம் மற்றும் ரூபா 1.6 மில்லியன் அல்லது 51 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக, அலுவலகங்கள் அவ்வப்போது மூடப்பட்டு, குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களே அழைக்கப்பட்டுள்ளனர். இந்த எதிர்பாராத சூழ்நிலையால், முந்தைய திட்டங்களின்படி செயல்பட முடியாது. இவ்வாறானதொரு சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில், இலக்குகளை அடைவதற்கு பொருத்தமான வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | வருடாந்த வரவு செலவுத் திட்டம் முடிந்தவரை துல்லியமாகத் தயாரிக்கப்பட வேண்டும். |